வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 23.7.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் புதிய வருமான வரிமுறையின் கீழ், 50 ஆயிரம் ரூபாய் நிலைக் கழிவு, 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது.

மத்திய பட்ஜெட்டில், முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான, 9 முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய பட்ஜெட், சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களின் அதிகாரப் பங்கேற்புக்கு உதவும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்

வளர்ச்சியை நோக்கிச் செல்வதான பிரதமர் திரு நரேந்திர மோடியின் உத்தரவாதத்தை உறுதிப் படுத்துவதாக மத்திய பட்ஜெட் அமைந்திருப்பதாக புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறி உள்ளார்.

பட்ஜெட்

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் தாக்கல் செய்த நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் புதிய வருமான வரிமுறையை தெரிவு செய்யும் தனிநபர்களுக்கு, 50 ஆயிரம் ரூபாய் நிலைக் கழிவு, 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. 3 லட்சம் ரூபாய் வரையிலான ஆண்டு வருமானத்திற்கு வருமான வரி இல்லை. 3 லட்சம் ரூபாயில் இருந்து 5 லட்சம் ரூபாய் வரையிலான வருமானத்திற்கு 5 சதவிகிதமும், 7 லட்சம் ரூபாய் முதல் 10 லட்சம் ரூபாய் வரையிலான வருமானத்திற்கு 10 சதவிகிதமும், வரி விதிக்கப்படும். 10 லட்சம் ரூபாய் வரை 12 லட்சம் ரூபாய் வரை உள்ள வருமானத்திற்கு, வரி 15 சதவிகிதமாகவும், 12 லட்சம்

ரூபாய் முதல் 15 லட்சம் ரூபாய் வரை உள்ள வருமானத்திற்கு, வரி 20 சதவிகிதமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 15 லட்சம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு வரி விகிதம் 30 சதவிகிதமாக இருக்கும் என்று நிதியமைச்சர் அறிவித்தார்.

மத்திய பட்ஜெட்டில், 25 முக்கிய கனிமங்களுக்கும், புற்றுநோய் சிகிச்சைக்கான 3 மருந்துகளுக்கும், இறக்குமதி வரியில் இருந்து விலக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மொபைல் போன் மற்றும் சார்ஜர் மீதான சுங்கவரி 15 சதவிகிதமாகவும், தங்கம் மற்றும் வெள்ளி மீதான அடிப்படை சுங்கவரி 6 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலை பாதுகாக்கம் வகையில், பிளாஸ்டிக் மீதான சுங்க வரி 25 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது. சூரிய சக்தி மின் உற்பத்திக் கருவிகளுக்கான உதிரி பாகங்களுக்கு, சுங்க வரி விலக்களிக்கப் பரிசீலிக்கப்படுவதாகவும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டில், நாட்டின் முன்னேற்றத்திற்கான, 9 முன்னுரிமைத் துறைகளுக்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதும், எரிசக்திப் பாதுகாப்பு, நகர்புற வளர்ச்சி, திறன் மேம்பாடு உள்ளிட்ட திட்டங்களும், இதில் அடங்கும்.

வேளாண்மை மற்றும் வேளாண்சார் துறைகளுக்கு, 1.52 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த 2 ஆண்டுகளில் 1 கோடி இயற்கை விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கப்படும் என்றும் இயற்கை விவசாயத்திற்கு தேவையான உயிரி இடுபொருள் மையங்கள் 10 ஆயிரம் இடங்களில் அமைக்கப்படும் என்றும் நிதியமைச்சர் தெரிவித்தார்.அடுத்த 5 ஆண்டுகளில் 1 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில், 500 தொழில் பழகுனர் மையங்களும், ஆயிரம் தொழிற்பயிற்சி நிறுவனங்களும் அமைக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். 20 லட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும் என்றும், அவர் கூறினார்.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், மின்னணு வர்த்தக ஏற்றுமதி மையங்கள் அமைக்கப்படும் என்றும் தொழிற்சாலை ஊழியர்களுக்கு, வாடகை வீடு வழங்கும் திட்டம், அரசு-தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் என்றும் நிதியமைச்சர் அறிவித்தார். முத்ரா திட்ட கடன் மீதான உச்சவரம்பு 20 லட்சம் ரூபாயாக உயர்வு, 30 லட்சம் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வேலை வாய்ப்புடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டம், சூரியசக்தி திட்டத்தின் கீழ், 1 கோடி வீடுகளுக்கு 300 யூனிட் இலவச மின்சாரம் உள்ளிட்ட அறிவிப்புகளும் பட்ஜெட்டில் இடம் பெற்றன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.4 சதவிகிதம், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் என்றும், நகர்புற வீட்டு வசதியை மேம்படுத்த 10 கோடி ரூபாய் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், நிதியமைச்சர் அறிவித்தார். உலக அளவிலான சுற்றுலா கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்த நடவடிக்கை

எடுக்கப்படும் என்றும் நாலாந்தா பல்கலைக்கழகம் அமைந்திருந்த இடம் சுற்றுலா மையமாக மேம்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

ஒடிசாவில் நினைவுச் சின்னங்களை புனரமைக்க மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆந்திர பிரதேசத்தில் புதிய தலைநகரை உருவாக்க நடப்பாண்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் சிறப்பு நிதி அறிவிக்கப்பட்டுள்ளது.

பீகாரில் புதிய விமான நிலையங்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பீகார் மற்றும் அசாமில் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு பட்ஜெட்டில் தொகுப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விசாகப் பட்டிணம்-சென்னை தொழில் நெடும் பாதையில் உள்ள கோப்பர்த்தி-யில் தொழில் முனையம் அமைக்கப்படும் என்றும் நிதியமைச்சர் பட்ஜெட்டில் அறிவித்தார்.

நடப்பு நிதியாண்டில், கடன் அல்லாத மத்திய அரசின் மொத்த வருவாய், 32.07 லட்சம் கோடி ரூபாயாகவும். மொத்த செலவினங்கள், 48.21 லட்சம் கோடி ரூபாயாகவும் இருக்கும்

என பட்ஜெட்டில் மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 4.9 சதவிகிதமாக கணக்கிடப்பட்டுள்ளது.

பட்ஜெட்-சேர்க்கை

மக்களவையில் இன்று பட்ஜெட் தாக்கலைத் தொடர்ந்து, நடப்பு நிதியாண்டிற்கான நிதி மசோதாவை, நிதியமைச்சர் தாக்கல் செய்தார். அதைத் தொடர்ந்து சபாநாயகர் திரு ஓம் பிர்லா, அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைத்தார். பின்னர் மாநிலங்களவையிலும் மத்திய பட்ஜெட்டின் நகலை நிதியமைச்சர் தாக்கல் செய்தார். அதைத் தொடர்ந்து மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைத்தார்.

மோடி-கருத்து

நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களின் அதிகாரப் பங்கேற்புக்கு உதவும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். விவசாயிகள், கிராமவாசிகள் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் வளமான வாழ்விற்கு ஆதரவான விதத்தில்

பட்ஜெட் அமைந்திருப்பதாக வீடியோ செய்தி ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். மத்திய பட்ஜெட்டினால் புதிய வேலை வாய்ப்புகள், சுய வேலை வாய்ப்புகள் மற்றும் இதர வாய்ப்புகளும் கிடைக்கும் என்றும் இதனால் நாடு, புதிய உயரங்களை எட்டும் என்றும் பிரதமர் கூறி உள்ளார். உலகின் முக்கிய உற்பத்திக் கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், இதில் முக்கிய பங்காற்றும் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறைக்கான கடன் வசதிகள் பட்ஜெட்டினால் மேம்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்புத் துறையில் சுயசார்பு நாடாக இந்தியாவை மேம்படுத்தவும் பட்ஜெட்டில் வகை செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் மேலும் கூறி உள்ளார்.

*பட்ஜெட்-கட்சிகள்*

சுயசார்புடன் கூடிய வளமான, முன்னேறிய இந்தியாவை உருவாக்க மத்திய பட்ஜெட் உதவும் என்று, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். அனைவரையும் உள்ளடக்கிய, விரைவான வளர்ச்சிக்கான, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப நாட்டின்

பொருளாதார சீர்திருத்தங்களை, இந்த பட்ஜெட் துரிதப்படுத்தும் என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். மொத்த பட்ஜெட்டில் 12.9 சதவிகிதம், பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டு இருப்பதையும் அவர் வரவேற்றுள்ளார்.

வரவிருக்கும் ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சிப் பயணத்திற்கான உந்து சக்தியாக மத்திய பட்ஜெட் திகழும் என்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறி உள்ளார். 9 முன்னுரிமை துறைகள் மீது அரசு, நீடித்த முறையில் கவனம் செலுத்தி வருவதாகவும் மத்திய பட்ஜெட்டினால் பல்வேறு முக்கிய துறைகளில் ஏராளமான புதிய வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய பட்ஜெட், அனைத்து மக்களின் கனவு பட்ஜெட்டாகவே அமைந்திருப்பதாக. நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறி உள்ளார். அனைத்து பிரிவினருக்கான இந்த பட்ஜெட், வடகிழக்கு பிராந்தியத்தில் வங்கி சேவைகளின் மேம்பாட்டிற்கும் உதவிகரமாக இருக்கும் என்று அவர் கூறி உள்ளார்.

இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை மேம்படுத்த முக்கிய அறிவிப்புகள் பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ளதாக மூத்த பிஜேபி தலைவர் திரு ரவிசங்கர் பிரசாத் பாராட்டி உள்ளார். பீகாருக்கு வெள்ளதடுப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை மூத்த பிஜேபி தலைவர் திரு ரவிகிஷன் வரவேற்றுள்ளார்.

*கருத்து-தொழில்*

நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை தொழில் துறையினர் வரவேற்றுள்ளனர். வளர்ச்சி நோக்கம் கொண்ட இந்த பட்ஜெட்டில் இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினர் மீதும் முக்கிய கவனம் செலுத்தப் பட்டுள்ளதாக, ஃபிக்கி தொழில்-வர்த்தக கூட்டமைப்பின் தலைவர் திரு அனீஷ் ஷா புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் கூறினார். அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய, சமநிலை பட்ஜெட்டாக மத்திய பட்ஜெட் அமைந்திருப்பதாக. அஸோச்சாம் தொழில் வர்த்தக கூட்டமைப்பின் திரு தீபக் சூட் ஆகாஷவாணி செய்தியாளரிடம் கூறினார். முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை எட்ட இந்த பட்ஜெட் உதவும் என்று அவர் தெரிவித்தார்.

*ரங்கசாமி-கருத்து*

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த பட்ஜெட், வளர்ச்சியை நோக்கி நாட்டை முன்னெடுத்துச் செல்வதான பிரதமர் திரு நரேந்திர மோடியின் உத்தரவாதத்தை உறுதிப் படுத்துவதாகவும், ஏழைகள், விவசாயிகள், இளைஞர்கள். பெண்கள் உட்பட அனைத்து தரப்பினரின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதாகவும், அமைந்து இருப்பதாக புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறி உள்ளார். விவசாய மேம்பாட்டிற்கு 1.52 லட்சம் கோடி ரூபாய், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு 3 லட்சம் கோடி ரூபாய், 4.12 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்க 2 லட்சம் கோடி ரூபாய், 3 கோடி குடும்பங்களுக்கு வீட்டு வசதி, 1 கோடி மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி 10 லட்சம் ரூபாய் வரை உயர்கல்விக் கடன் உட்பட, மத்திய பட்ஜெட்டில் வெளியாகி உள்ள அறிவிப்புகளை முதலமைச்சர் திரு ரங்கசாமி வரவேற்றுள்ளார்.

புதுச்சேரி-ஒப்பந்தம்

புதுச்சேரி மாநில கலைஞர்களின் கலை-இலக்கிய நிகழ்ச்சிகள், பண்பாட்டு கண்காட்சிகள், ஓவிய முகாம்கள், மற்றும் பயிலரங்குகளை, ஆண்டு முழுவதும் ஆரோவில்லில் நடத்துவது குறித்து, கலை-பண்பாட்டுத் துறைக்கும், ஆரோவில் அறக்கட்டளைக்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி முன்னிலையில், கலை-பண்பாட்டுத் துறைச் செயலர் திரு நெடுஞ்செழியன், ஆரோவில் அறக்கட்டளை அமைப்பின் சிறப்பு அதிகாரி திருமதி வஞ்சுளவல்லி ஸ்ரீதர் ஆகியோர், இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். வெளிநாட்டினர் அதிகம் வரக் கூடிய இடமான ஆரோவில்லில் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதால் உள்ளூர் கலைஞர்களுக்கு பல வாய்ப்புகள் உருவாகும் என்றும், பாரதியார் பல்கலைக்கூட மாணவர்களின் கலை படைப்புகளுக்கான நிரந்தரக் காட்சி அரங்கம், இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஆரோவில்லில் அமைக்கப்படும் என்றும் அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் புதிய வருமான வரிமுறையின் கீழ், 50 ஆயிரம் ரூபாய் நிலைக் கழிவு, 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது.

மத்திய பட்ஜெட்டில், முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான, 9 முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய பட்ஜெட், சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களின் அதிகாரப் பங்கேற்புக்கு உதவும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்

வளர்ச்சியை நோக்கிச் செல்வதான பிரதமர் திரு நரேந்திர மோடியின் உத்தரவாதத்தை உறுதிப் படுத்துவதாக மத்திய

பட்ஜெட் அமைந்திருப்பதாக புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------------